


# “எல்லா மாநிலங்களுக்கும் பகுத்தறிவில், நாம்தான் முன்னோடி!”

**கழக இளைஞர் அணி நடத்திய ‘தி.மு.க. 75 அறிவுத் திருவிழா’ நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற ‘இருவண்ணக் கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தின் ஒன்பதாவது அமர்வில் ‘பாதை மாறா பகுத்தறிவுப்பயணம்’ என்ற தலைப்பில், கழக மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. அவர்கள் ஆற்றிய உரை :**

“பேரறிஞர் அண்ணா அவர்கள் ‘இன்னும் சாதி இருக்கிறது, பேதம் போக்கப்படவில்லை, ஆண்டையும் அடிமையும் இருக்கிறார்கள், வைதீகம் என்னும் நோய் இருக்கிறது, இன்னும் மாறவில்லை” என்பதைக் குறிப்பிட்டு, ‘வைதீகம் என்னும் நோய்க்கு மருத்துவர் மருந்து கொடுத்து குணப்படுத்த முடியாது’ என்றார். அப்படியானால், யாரால் இந்த நோயைப் போக்க முடியும்?

## பகுத்தறிவே மருந்து

அறிஞர் அண்ணாவே சொல்கிறார் ‘இளம் பருவத்தில் உள்ள மாணவர்களால் முடியும். பகுத்தறிவு என்னும் மருந்தால் வைதீகம் என்ற நோயைப் போக்க முடியுமே தவிர, வேறு எந்த மருந்தாலும் போக்க முடியாது’ என்று. பேரறிஞர் அண்ணாவின் வார்த்தைகளுக்கு ஏற்ப, மருத்துவராகிய என்னை, இன்று நம் தமிழ்நாட்டு துணை முதல்வர், இளைஞர் அணிச் செயலாளர், ‘பாதை மாறா பகுத்தறிவுப் பயணம்’ என்ற தலைப்பில், முத்தமிழறிஞர் கலைஞர் கட்டிய வள்ளுவர் கோட்டத்தில் நடக்கும், அறிவு விழாவில் பேச வாய்ப்பளித்துள்ளார். அவர்களுக்கு என் நன்றி.

உங்களுக்குத் தெரியும். தமிழ்நாட்டின் வளர்ச்சி 2011 - 2021 வரைக்கும் எப்படி இருந்தது? 2021-2024 வரைக்கும் எப்படி இருக்கிறது? நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர். வள்ளுவர் கோட்டத்தின் சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர். பத்து ஆண்டுகள் வள்ளுவர் கோட்டம் எப்படி இருந்ததோ, அப்படித்தான் தமிழ்நாடும் இருந்தது. அது இடிந்துபோன பாழடைந்த மண்டபமாக இருந்தது. யாரும் இந்த வள்ளுவர் கோட்டத்தை அணுகவில்லை. இந்த அரங்கு பாழடைந்த தன்மையால் சூழ்ந்திருந்தது, ஒட்டடைகள் படிந்து இருந்தன. அப்படித்தான் 2011 முதல் 2021 வரை தமிழ்நாட்டு ஆட்சி இருந்தது.

## தமிழ்நாடும் வள்ளுவர் கோட்டமும்

இன்று நம் தமிழ்நாட்டு முதல்வர் வள்ளுவர் கோட்டத்தைப் புதுப்பித்து, நவீன தமிழ்நாடு எப்படி ஜொலிக்கிறதோ, அதுபோல் இன்று வள்ளுவர் கோட்டமும் ஜொலித்துக்கொண்டிருக்கிறது என்றால், அது திராவிட மாடல் ஆட்சியின் சாதனை.

தப்பித்தவறி, 2021-ல் ஆட்சி நமக்குக் கிடைக்காமல் போயிருந்தால், கணபதி ஸ்தபதி உருவாக்கிய அந்த ஒற்றைக் கருங்கல்லில் உருவான வள்ளுவர் சிலைக்குக் காவிச் சாயம் பூசப்பட்டிருக்கும். இன்று வள்ளுவர் கோட்டம் சிறப்புடன், லேசர் ஒளிக்கீற்றுடன், வண்ண வெளிச்சத்துடன் மின்னுகிறது.

இளைஞர் அணிச் செயலாளர் கடந்த ஒரு வாரமாக வள்ளுவர் கோட்டத்தில் ஆய்வு செய்துகொண்டிருந்தார். மேலே வள்ளுவர் சிலை அமைந்திருக்கும் கருவறையில் ஆகம விதிகள் கிடையாது. யார் வேண்டுமானாலும் நுழையலாம். அப்படி ஆய்வு செய்யும்போது, இஸ்லாமியப் பெண்கள் மேலே இருந்து அண்ணனுக்கு ‘டாட்டா’ காட்டினார்கள்.



**மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ.**
**கழக மருத்துவ அணிச் செயலாளர்**

அண்ணனும், ‘சிறுபான்மையினரின் பாதுகாவலராக நாங்கள் இருக்கிறோம், கவலைப்படாதீர்கள்’ என்று டாட்டா காட்டினார்கள். தோழர்களே, நம் இளைஞர் அணிச் செயலாளருக்குப் பல பரிமாணங்கள் உண்டு. சிறந்த சட்டமன்ற உறுப்பினர், உலகிலேயே சிறந்த விளையாட்டுத் துறை அமைச்சர் நம் துணை முதல்வர், நம் இளைஞர் அணிச் செயலாளர். இன்று முதல்வருக்குப் பக்கபலமாக, அனைத்து அதிகாரங்களுடனும் ஆய்வு செய்து தமிழ்நாட்டு வளர்ச்சிக்காக உழைத்துக் கொண்டிருக்கிறார். அவரின் கீழ்தான் மகளிர் சுய உதவிக்குழுக்கள் மற்றும் பல்வேறு அரசாங்கத் திட்டங்கள் நேரடியாகக் கண்காணிப்பு செய்யப்படுகின்றன.

## பகுத்தறிவு மரபு

அண்ணன் சனாதன ஒழிப்பு பற்றிப் பேசும்போது, கடும் விமர்சனங்கள். அண்ணன் எதற்கு மனுதர்ம ஒழிப்பு பேச வேண்டும், பிறப்பின் அடிப்படையில் உயர்வு, தாழ்வு பற்றிப் பேச வேண்டும், அனிதாவுக்காகவும் மனித சமத்துவத்துக்காகவும் நீதிக்காகவும் எதற்கு போராட்டக் களத்தை அமைக்க வேண்டும் என்றால், அந்தப் பகுத்தறிவுச் சிந்தனை எங்கிருந்து வருகிறது என்றால், நீதிக்கட்சியை உருவாக்கிய, தந்தை பெரியாரால் ‘திராவிட லெனின்’ என்று சொல்லப்பட்ட டி.எம்.நாயர் உருவாக்கிய அடித்தளம் அது.

டி.எம்.நாயர் நீதிக்கட்சி உருவாக்கத்தில் மையப்புள்ளி. வகுப்புவாரி இட ஒதுக்கீட்டுக்கு ஆரம்பகட்டம். பார்ப்பனர் அல்லாதோர் அறிக்கைக்கு காரணகர்த்தா. அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனபோது, திருவல்லிக்கேணியில் உள்ள பார்த்தசாரதி கோயிலில் பிராமணர்கள் டி.எம்.நாயர் சாக வேண்டும் என்று யாகம் வளர்த்தார்கள். அப்போது, ஆயிரம் தேங்காய்கள் உடைக்கப்படுகின்றன. அடுத்த நாளே டி.எம். நாயர் உடல்நலம் சரியாகி, விக்டோரியா ஹாலில் பேசும்போது, ‘ரொம்ப நன்றி. நீங்க தேங்காய் உடைத்தீர்கள், நான் பிழைத்துக்கொண்டேன். ஆயிரம் தேங்காய்களை நான் சாவதற்காக உடைத்தீர்கள். ஆனால், நான் பிறந்த கேரளாவில் இருந்துதான் உங்களுக்குத் தேங்காய்கள் வந்திருக்கின்றன. எங்கள் மலபார் விவசாயிகள் சார்பாக உங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்’ என்றார்.

## கலைஞரின் பகுத்தறிவுக் குறும்பு

மணல் திட்டை ‘ஆதாம் பாலம்’ என்று சொன்னார்கள். அந்த மணல் திட்டை உடைத்து ‘சேது சமுத்திரத் திட்டத்தை’ நிறைவேற்ற முயலும்போது, ‘அய்யோ, கடவுள் ராமர் பாலத்தை நீங்கள் இடிக்கிறீர்களா?’ என்று கேட்டார்கள். ‘பாலம் கட்ட ராமர் என்ன பொறியாளரா?’ என்று கேட்டார் நம் முத்தமிழறிஞர் கலைஞர். அதுதான் பகுத்தறிவு. அதற்காக கலைஞரின் தலைக்கு விலை நிர்ணயித்து, அவரின் ‘தலையை சீவப்போகிறோம்’ என்றார்கள். அப்போது கலைஞர் சொன்னார், ‘நானே என் தலையை சீவுவதில்லை’ என்று. அது அவரின் பகுத்தறிவுக் குறும்பு.

## உதயநிதியின் பகுத்தறிவுக் குறும்பு

நம் இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள் சனாதனத்தை ஒழிப்போம் என்று பேசியபோது, அவர் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று இந்தியா முழுவதும் நீதிமன்றங்களில் வழக்கு தொடுத்தார்கள். ஆனால் ‘நான் சொன்னது சொன்னதுதான். மன்னிப்பு கேட்க மாட்டேன்’ என்று உறுதியாகச் சொல்லிவிட்டார். அவரை சமூக வலைதளங்களில் ஆதிக்கவாதிகள் வசைபாடியபோது, தன் சமூக வலைதளப் பக்கத்தில் கொசுவத்தி சுருள் படத்தைப் பதிவிட்டார். அது டி.எம்.நாயர், கலைஞரிடம் இருந்து வந்த பகுத்தறிவுக் குறும்பு.

வைக்கம் போராட்டத்தின்போது, திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் பெரியார் இறக்க வேண்டும் என்று யாகம் வளர்த்தார்கள். ஆனால், பெரியார் இறக்கவில்லை. திருவிதாங்கூர் ராஜாதான் இறந்துபோனார். வைக்கம் வீதியில் பிறப்பின் அடிப்படையில் பேதம் கூடாது என்று பெரியார் தொடங்கிய போராட்டம் இந்நாள் வரைக்கும் தொடர்ந்துகொண்டிருக்கிறது தோழர்களே!

உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி மீது செருப்பு வீசினார்கள். செருப்பு வீசியதற்குப் பிறகு, அந்த வழக்கறிஞர் ‘நான் சனாதனக் கொள்கையின் அடிப்படையில்தான் செருப்பை வீசினேன்’ என்று வெளிப்படையாகச் சொல்கிறார். ஆனால், நாம் தமிழ்நாட்டில் சனாதனத்துக்கு எதிராகப் பேசுகிறோம். இதுதான் பகுத்தறிவு.

## பொருளாதாரத்துக்கும் அடிப்படை

இப்போது, பொருளாதாரத்துக்கான நோபல் பரிசை மூன்று பொருளாதார நிபுணர்களுக்குக் கொடுத்தார்கள். ஒரு சமூகம், பொருளாதாரத்தில் உயர்வதற்கான அடிப்படையாக அவர்கள் முன்வைப்பது *Creative Destruction* என்ற கருத்தாக்கத்தை. ஒரு சமூகம், பொருளாதாரத்தில் உயராமல் இருக்கக் காரணம், காலங்காலமாகத் திணிக்கப்பட்ட, அவர்கள் மூளையில் பிணைக்கப்பட்ட அடிமைச்சங்கிலிதான்.

அந்தச் சங்கிலியை உடைத்தால்தான் பொருளாதாரம் உயரும் என்று பல்வேறு ஆய்வுகளுடன் அவர்கள் முன்வைக்கும் கருத்தாக்கம்தான் ‘*Creative Destruction*’. அந்த ‘*Creative Destruction*’ஐ செய்த இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். அதற்குத் தமிழ்நாடுதான் ஆய்வகம்.

மாநில உரிமைகளுக்காகப் பல்வேறு மாநிலங்கள் பேசலாம். ஆனால், பகுத்தறிவுச் சிந்தனையில் திராவிட முன்னேற்றக் கழகம்தான் முன்னோடி. பகுத்தறிவுச் சிந்தனையின் அடிப்படையில்தான் தி.மு.க மாநில சுயாட்சியைப் பார்க்கிறது; இந்தித் திணிப்பை எதிர்க்கிறது; சமூக நீதியை முன்வைக்கிறது. பகுத்தறிவு என்பது நமக்கு பொதுவான காரணி.

## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

**அறிவுத் திருவிழாவின் ஒரு பகுதியாக நடைபெற்ற ‘முற்போக்கு புத்தகக்காட்சி’யில் ஒவ்வொரு பதிப்பகத்திலும் அதிகம் விற்பனையான நூல்கள் :**




அய்யுறு வெளியீடு :
**நீலச்சட்டைக் கலைஞர்**

புதிய ஜனநாயகம் பதிப்பகம் :
**ஆர்.எஸ்.எஸ்ஸின் ஆழமும் அகலமும்**

Dravidian Stock :
**திருக்குறள் கலைஞர் உரை**

முன்னேற்றப் பதிப்பகம் :
**இந்திய தேசிய ராணுவமும் மறைக்கப்பட்ட உண்மைகளும்**

ஆழி பதிப்பகம் :
**Carry on, But Remember**

இப்போது, ஒன்றிய அரசால் தேசிய ஆராய்ச்சிக் கழகம் (*National Research Foundation*) உருவாக்கப்பட்டு வேதங்கள் அடிப்படையில் பொய்யும் புரட்டும் உள்ள மாட்டு மூத்திரம் கோமியம் குறித்து யார் ஆய்வு பண்ணுகிறார்களோ, அவர்களுக்குப் பல கோடி நிதி ஒதுக்கீடு. ஆனால், உண்மையிலேயே அறிவியல் தன்மையோடு செயல்படுபவர்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில்லை. இதைத் தட்டிக் கேட்க வேண்டுமானால், நமக்கு பகுத்தறிவு அவசியம் தோழர்களே!

## கலைஞர் என்னும் மானமிகு சுயமரியாதைக்காரர்

முத்தமிழறிஞர் கலைஞரின் கடைசி கால கட்டத்தில், அவருடைய மருத்துவர் நான். அவரால் பேச முடியவில்லை. நினைவாற்றல் குறைந்துகொண்டே வந்தது. மூச்சுத் திணறல் ஏற்படும். ரொம்ப கஷ்டப்பட்டார்.

அவருடைய உதவியாளர் நித்யா அவர்கள் தெய்வ நம்பிக்கை உடையவர். ஒவ்வொரு தடவையும் அவர் சாமி கும்பிட்டுட்டு முத்தமிழறிஞர் கலைஞர் நெற்றியில் திருநீறு வைத்துவிட்டுப் போவார். இயலாத சூழலிலும், முதுமையின் விளிம்பில் இருக்கும்போதும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மெதுவாகக் கையை எடுத்து அதை அழிப்பார். அப்படிப்பட்ட மானமுள்ள சுயமரியாதைக்காரர் வழிநடத்தும் இந்த அரசியல் இயக்கத்தில் கொள்கையின்பால், பகுத்தறிவின்பால் செயல்படுவோம், வெற்றி பெறுவோம்.” ●